Registered as a News Papef

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 02 (17-12-1992) வியாழக்கிழமை ஓசை 303

## காவல் பணிமனை கிளிநொச்சியில் திறப்பு

தமிழீழ காவல்துறையின் கிளிநொச்சி பிரதேசத்திற்கான காவல் பணிமனை நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப்புலிகளின் வன்னி மாவட்ட விசேட தளபதி தீபனும், தமிழீழ காவல்துறை கொடியை காவல்துறை பொறுப்பாளர் திரு பா நடேசன் அவர்களும் ஏற்றிவைத்தனர். இதைத் தொடர்ந்துவிடுதலைப் புலிகளின் வன்னி மாவட்ட தளபதி கபிலன், கிளிநொச்சி மாவட்ட தளபதி பீலிக்ஸ் ஆகியோர் மங்களவிளக்கேற்றி வைக்க, காவல் பணிமனையை விசேட தளபதி தீபன் நாடாவை வெட்டிதிறந்து வைத்தார். இதில் (4ஆம் பக்கம் பார்க்க)

# விளான் சந்தியில் கடும் சண்டை

# ராணுவத்தின் முயற்சி முறியடிப்பு

## இழப்புடன் படையினர் பின்வாங்கினர்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி, விளான் பகுதியிலிருந்து விளான் சந்தி நோக்கி இரு முனைகளில் முன்னேற முயன்ற இராணுவத்தினரின் முயற்சி விடுதலைப் புலிகளினால் முறியடிக்கப்பட்டது. டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் முன்னேறிய இராணுவத்தினரை விளான் சந்தியில் மறித்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். சுமார் நான்கு மணி நேரம் நடைபெற்ற கடும் மோதலின் பின் இழப்புகளுடன் இராணுவம் முகாம் திரும்பியது.

நேற்றுக்காலை 9.45 மணியளவில் அளவெட்டி காரைக் காடுவைரவர்கோயில்,விளான் பகுதிகளில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் கனரக வாகனங்கள் சகிதம் அகோர எறிகணைத் தாக்குதலை நடத்தியவாறு விளான் சந்தியை நோக்கி முன்னேற முயன்றனர்.

பிரதான வீதி மற்றும் வயல் பகுதிகளூடாக முன்னேற முயன்ற இவ் இராணுவத்தினரை வழிமறித்து நண்பகல் 2 மணிவரை விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர். புலிகளின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கினர்.

இத்தாக்குதல் நடவடிக்கையின்போது விடுதலைப்புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார். (9,11)

### வீரச்சாவு



லெப். சிற்றம்பலம்

விளான் பகுதியில் முன்னேற

## அகோர எறிகணை வீச்சால் மக்கள் இடம் பெயர்வு

### காவல்துறை உடைமைகளை காத்தது

(சுன்னாகம்)

சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பு இடங்களை நாடினர்.

நேற்றுக் காலை 9.45 மணியளவில் வலி மேற்கு, வலி

இதனால் பிரான்பற்று, விளான், பண்டத்தரிப்பு, தொட்டிலடி, மாகியப்பிட்டி பகுதிகளில்தங்கியிருந்த மக்கள் தமது உடைமைகளையும் கைவிட்டு மானிப்பாய், சுன்னாகம் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். இதனால் பெருமளவிலான உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

காவல்துறைக்கு

யில் அப்பகுதிகளுக்கு விரைந்த தமிழீழ காவல் துறையினர் அங்கு காவல் கடமையில் ஈடுபட்டனர். வழமையாக மக்கள் வெளியேறும் சந்தர்ப்பங்களை தமக்கு சாதகமாக பயன்படுத்தி சில திருட்டுக் கும்பல்கள் மக்களின் சொத்துக்களை சூறையாடுவது தெரிந்ததே. இதனைத் தடுப்பதற்காகவே தமிழீழ காவல் துறையினர்

## யூ. என். பி. மாநாட்டில் டீ மெல்?

[கொழும்பு]

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் ஐக்கிய தேசியக்கட்சி வருடாந்த மாநாட்டில் சமுகமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ தே. கட்சி மாநாடு சுகததாஸா மைதான உள்ளக அரங்கில் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. சிறிலங்கா எங்குமிருந்து 16,000 பிரதிநிதிகள் இந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிராகப் போரிட மேலதிக 15,000 படையினர் தேவை

### 2,000 பேர் கொண்ட சிறப்பு அணியும் வேண்டுமாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட புதிதாக 15,000 படையினர் வரை மேலதிகமாக தேவைப்படுவதாக முக்கிய இராணுவ அதிகாரியினால் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிக்கு தெரிவித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் ''லங்கா தீப'' பத்திரிகைக்கு நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பாதுகாப்பு நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் பெரும் தொகையான இராணுவத்தினரை கிழக்கு மாகாணத்தில் உள்ள கிராமங்களின் பாதுகாப்புக்கு முடங்கிப் போயுள்ளதால் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு பயன்படுத்த முடியாமல் உள்ளது எனவும்,

விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்துவதானால்பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கான அவசியமான சூழ்நிலை உருவாகி உள்ளது என்றும் இந்த இராணுவ நடவடிக்கைக்கு பயன்படுத்த 15 000 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தேவைப்படுவதாக அப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே நிலை 1990ஆம் ஆண்டில் இருந்து நீடித்துக்கொண்டு வந்துள்ளதாகவும இதைப்பற்றி பல இராணுவ உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டு வரப்பட்டது என்றும்,

விடுதலைப் புலிகளுடன் சண்டையிடுவதற்கு விஷேட கெரில்லா பயிற்சி பெற்ற 2000இற்கும் மேற்பட்ட படையினர் தேவை எனவும், இவர்களை இடைக் கிடை நடைபெறும் கெரில்லா சண்டையில் பயன்படுத்தவேண்டிவரும் என்றும் இதன் மூலமே விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி தோல்வியடையச் செய்ய முடியும் என்பதை பல தடவை பாதுகாப்பு உயர் அதிகாரிகளிடம் கூறிவந்ததாகவும், ஆயுதங்கள், வெடிமருந்துகள் என்பவற்றுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் இவற்றை நிவர்த்தி செய்து தருமாறு பல உயர் அதிகாரிகளிடம் எடுத்து கூறியதாகவும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர்தெரிவித்துள்ளார்.

## இராணுவத்துடன் சேர்ந்து பிக்குகள் போராட வேண்டும்

தேசிய பக்த வீரர் சங்கத்தலைவர் கோரிக்கை

தினர் கனரக வாகனங்கள் சகிதம் அகோர எறிகணைத் தாக்

முயன்ற இவ் இராணுவத்தினரை வழிமறித்து நண்பகல்

பலத்த இழப்புகளுடன் பின் வாங்கினர்.

# அகோர எறிகணை வீச்சால் மக்கள் இடம் பெயர்வு

## காவல்துறை உடைமைகளை காத்தது

(சுன்னாகம்)

சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பு இடங்களை நாடினர்.

நேற்றுக் காலை 9.45 மணியளவில் வலி மேற்கு, வலி வடக்கு பகுதிகளிலிருந்து விளான் நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கு உதவியாக அகோர எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் பிரான்பற்று, விளான், பண்டத்தரிப்பு, தொட்டிலடி, மாகியப்பிட்டி பகுதிகளில்தங்கியிருந்த மக்கள் தமது உடைமைகளையும் கைவிட்டு மானிப்பாய், சுன்னாகம் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். இதனால் பெருமளவிலான உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

### காவல்துறைக்கு பாராட்டு

நேற்றைய தினம் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதல்களினால் மக்கள் இடம்பெயர்ந்த வேளையில் அப்பகுதிகளுக்கு விரைந்த தமிழீழ காவல் துறையினர் அங்கு காவல் கடமையில் ஈடுபட்டனர். வழமையாக மக்கள் வெளியேறும் சந்தர்ப்பங்களை தமக்கு சாதகமாக பயன்படுத்தி சில திருட்டுக் கும்பல்கள் மக்களின் சொத்துக்களை சூறையாடுவது தெரிந்ததே. இதனைத் தடுப்பதற்காகவே தமிழீழ காவல் துறையினர் அப்பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அகோர எறிகணைத்தாக்குதல்கள் நடைபெற்ற வேளையிலும் காவல்துறையினர் மேற்கொண்ட இந் நடவடிக்கைகளை பொதுமக்கள் பெரிதும் பாராட்டியதை நேரில் அவதானிக்க முடிந்தது

(9,11)

# வீரச்சாவு



லெப். சிற்றம்பலம்

விளான் பகுதியில் முன்னேற முயன்றசிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று காலை நடைபெற்ற உக்கிர மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த திருமலை தம்பலகமத்தைச் சேர்ந்த லெப்டினன்ட் சிற்றம்பலம் (அப்துல்லா) (நடராசா சந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

தெரிவித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் ''லங்கா தீப'' பத்திரிகைக்கு நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பாதுகாப்பு நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் பெரும் தொகையான இராணுவத்தினரை கிழக்கு மாகாணத்தில் உள்ள கிராமங்களின் பாதுகாப்புக்கு முடங்கிப் போயுள்ளதால் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு பயன்படுத்த 15 000 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தேவைப்படுவதாக அப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே நிலை 1990ஆம் ஆண்டில் இருந்து நீடித்துக்கொண்டு வந்துள்ளதாகவும இதைப் பற்றி பல இராணுவ உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டு வரப்பட்டது என்றும்,

விடுதலைப் புலிகளுடன் லைப் புலிகளை பலவீனப் படுத்தி தோல்வியடைய செய்ய முடியும் என்பதை பல தடவை பாதுகாப்பு உயர் அதிகாரிகளிடம் கூறிவந்ததாகவும், ஆயுதங்கள், வெடி மருந்துகள் என்பவற்றுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் இவற்றை நிவர்த்தி செய்து தருமாறு பல உயர் அதிகாரிகளிடம் எடுத்து கூறியதாகவும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர்தெரிவித்துள்ளார்.

# இராணுவத்துடன் சேர்ந்து பிக்குகள் போராட வேண்டும்

## தேசிய யுத்த வீரர் சங்கதலைவர் கோரிக்கை

(கொழும்பு)

''வழிபாட்டு நிகழ்ச்சிகளில் புனிதப் பொருள்களைப் படைப்பதற்குப் பதிலாக சக்கர நாற்காலிகள், ஊன்று கோல்கள், பால்மா டின்கள் போன்ற பொருள்களை அன்பளிப்புச் செய்யுங்கள். இப்பொருள்களே யுத்த முனையில் போராடிவரும் இராணுவ வீரர்களின் கண்ணீரைத் துடைக்க உதவும்''

இவ்வாறு தேசிய யுத்த வீரர் மன்றத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித்த தேரோ தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெல்லன்வில ரஜமகா விகாரையில் இடம்பெற்ற பிரார்த்தனைக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்; துட்டகைமுனு அரசன் காலத்தில் பௌத்த குருமார்கள் இராணுவத்தினருடன் சேர்ந்து யுத்தகளத்தில் இறங்கினார்கள். பிச்சைப் பாத்திரத்தில் பிச்சையெடுத்து இராணுவ வீரர்களுக்கு உணவளித்தார்கள். இவ்வாறு செய்ததன் மூலமாகவே எல்லாளனிடமிருந்து இந்த நாட்டைப் பாதுகாத்தார்கள். இதேபோலவே வலகம்பா மன்னன் காலத்திலும் பௌத்த குருமார்கள் செயற்பட்டிருக்கிறார்கள்

இவ்வாறான செயல்களை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சகோதரிகள் உட்பட மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி, மற்றும் இவளாலைப் பகுதி சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை மக்கள் வாழ்விடங்கள் மீது மேற்கொண்ட அகோர எறிகணைத் தாக்குதல்களால் இரு சகோதரிகள் உட்பட மூவர் காயமடைந்தனர்.

காலை 9. 45 மணி முதல் நண்பகல் வரை முப்பதிற்கு மேற்பட்ட எறிகணைகள் இராணுவ முகாம்களிலிருந்து ஏவப்பட்டன. இவை மாகியப்பிட்டி, பிரான்பற்று, பண்டத்தரிப்பு, விளான், டச்வீதி மக்கள் வாழ்விடங்களில் பரவலாக வீழ்ந்து வெடித்தன.

இதன்போது அருணாசலம் வித்தியாசாலை அருகில் வீழ்ந்து வெடித்த ஓர் எறிகணையினால் அதே பகுதியைச் சேர்ந்த எஸ். ஜெயதா (வயது 28) இவரது சகோதரியான கிருபா (வயது 26)மற்றும்சித்திரா(25) ஆகிய மூவரும் படுகாயமடைந்தனர். இம் மூவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (9, 11, பா)

# கல்முனை அகதிமுகாமில் பெண் ஒருவர் கைது

(கல்முனை)

கல்முனை அகதிமுகாமில் தங்கியிருந்த பெண் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் குமிப்பிட்ட முகாமிற்குள் திடீரெனப் புகுந்த அதிரடிப்படையினர் அங்கு வாழ்ந்து வந்த பெண்மணி ஒருவரைக் கைது செய்த சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு பதற்றம் நிலவுகிறது.

காடுகளில் படையினரால் பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால் இம் மக்கள் காடுகளுக்குள் சென்று வாழ முடியாது திணறுகின்றனர்.

# பாம்பாமோட்டையில் பெண்கள்உட்பட ஐவர்கைது

(மன்னார்)

மாந்தை இராணுவ முகாமிலிருந்து பாம்பாமோட்டைப் பகுதிக்குக் கவச வாகனங்கள் மற்றும் உலங்கு வானூர்திகளின் உதவியுடன் முன்னேறிய இராணுவத்தினர் அங்கு இரு பெண்கள் உட்பட ஐவரைக் கைதுசெய்து முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

நேற்று முன்தினம் காலை 6 30 மணியளவில் மன்னார் மாந்தை சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து முன்னேறிய இராணுவத்தினர் பாம்பாமோட்டை என்னும் இடத்தைச் சுற்றிவளைத்தனர்.

இந்நடவடிக்கையின்போது இப்பகுதியில் வசித்து வந்த இரண்டு பெண்களையும், மூன்று ஆண்களையும் கைது செய்த இந்த இராணுவத்தினர் அவர்களை முகாமிற்கு கொண்டு சென்றனர்.

இவ்வாறு இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இப்பொதுமக்களின் பெயர்விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

# பயணிகள் படகு மீது பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் பயணம் செய்த பயணிகள் படகுகளை நோக்கி சிறிலங்கா கடற்படையினரின் படகுகள் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவில் கிளாலித் துறையில் இருந்து ஆலங்கேணிக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலிப் பாதை தடை; நோயாளர்,பயணிகள் அவதி

(பூநகரி)

கிளாலிப் படகு சேவை தடைப்பட்டதால் ஆயிரக்கணக்கான பிரயாணிகளும் நோயாளர்களும் அடிப்படை வசதிகள் இன்றி பூநகரிப் பகுதியில் அவதியுறுகின்றனர்.

யாழ் குடாநாட்டிற்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடையிலான ஒரேயொரு போக்குவரத்து பகுதியாக இருந்துவந்த கிளாலி கடற்போக்குவரத்து கடந்த பத்தாம் திகதி முதல் தடைப்பட்டுவருவது தெரிந்ததே. இப்பகுதி பயணிகள் படகுகள் மீது சிறிலங்கா கடற்படையினர் கண்மூடித்தனமாக மேற்கொள்ளும் பீரங்கி மற்றும் கலிபர் தாக்குதல்களால் இப்படகு சேவைகள் சீரற்று காணப்படுவதும் தெரிந்ததே.

இதனால் ஏனைய மாவட்டங்களிலிருந்து பல்வேறு அவசர தேவைகள் கருதி யாழ். குடாநாட்டிற்கு வந்த பயணிகள் மற்றும் அவசர நோயாளிகள் பூநகரிப் பகுதியில் தங்கியுள்ளனர்.

இவ்வாறு தங்கியுள்ளோரில் பல நோயாளர்களும் கர்ப்பிணித் தாய்மார்களும் அடங்குவர். இவர்கள் தங்குவதற்கான எந்த ஒரு அடிப்படை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# டிசம்பர் மாத நிவாரணம் செயலகம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தவர்களுக்கான டிசம்பர் மாதத்திற்குரிய முதல் இரண்டு வாரங்களுக்குமான இலவச உலர் உணவுப் பொருள்கள் சகல பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கும் நேற்றுமுதல் யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதியினால் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

மேற்படி நிவாரண விநியோகத்திற்கென யாழ் செயலகப் புனர்வாழ்வுப் பகுதியினால் அரிசி (வெ. ப), மா, சீனி, மைசூர்ப்பருப்பு. தீப்பெட்டி, கைலன்ட் (பால்மா) ஆகிய பொருள்களே விநியோகிக்கப்பட்டுள்ளன,

# அரிசித் தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அரிசித்தட்டுப்பாட்டை நீக்குவதற்கு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி தமது கையிருப்பில் உள்ள அரிசியை பல நோ. கூ. சங்கங்களுக்கு பங்கீடு செய்து வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பல நோ. கூட்டுறவுச்சங்கங்களுக்கு அவர்களினால் செலுத்தப்பட்ட பணத்திற்கான உணவுப் பொருள்கள் ''குமண'' கப்பலில் எடுத்து வரப்படுகின்றன. இருந்தும் தற்போதுள்ள நெருக்கடிகளைச் சமாளிக்கும் முகமாகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி அறிவித்துள்ளது.

மேலும் கப்பலில் பொருள்கள் வந்துசேர்ந்ததும் மிகுதிப் பொருள்கள் பற்றித் தீர்மானிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, ஊர்காவற்றுறை, வேலணை, பளை, கொடிகாமம், உடுப்பிட்டி,

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழ் எம்.பிகள் பதவி விலகலாம்?

[கொழும்பு]

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் சிலர் பாராளுமன்ற தெரிவுக்குழு நடவடிக்கையில் பங்கு கொள்ளாது விலகுவதுடன் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளிலிருந்து டிசம்பர் 31 ஆம் திகதியளவில் விலகவுள்ளதாக அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்புடைய ஒரு தீர்வை

[4 ஆம் பக்கம் பார்க்க]

# உடுகம்பொல இன்றி வழக்கு விசாரணை

முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் உடுகம்பொல இல்லாமலே அவருக்கு எதிரான வழக்கை நடத்த இருப்பதாக அரச தரப்பில் மேல் நீதிமன்ற நீதிபதி லெஸ்லி அபய சேகரா முன்னிலையில் தெரிவிக்கப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்


### கடிகாரமா? றேடியோவா

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல பணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5588)

### தவறிவிட்டது

இல. 420410514 V என்ற அடையாள அட்டையுடனும் மிகத் தேவையான பற்றுச்சீட்டுகளுடனும் பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிவகெங்கன், 31, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் என்ற முகவரியிலோ அல்லது ஈழநாதம் காரியாலயத்திலோ சமர்ப்பிக்கவும். (3793)

### விற்பனைக்கு

SONY TV, MV.300 டெக், கொண்டா 500 ஜெனரேட்டர் உதிரிப்பாக விற்பனைக்குண்டு தொடர்பு: T. மனோகரன் C/O தம்பித்துரை அம்மன் கோயிலடி, வல்வெட்டித்துறை. (3783)

### வைக்கோல் விற்பனைக்கு

வைக்கோல் உடன் விற்பனைக்கு தொடர்பு: K. அருணாசலம், ஆசிரியர், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. (3797)

### ENGLISH (ஆங்கிலம்)

SPOKEN ENGLISH WITH GRAMMAR AND LITERATURE.BY KANDASAMY 87, திருநெல்வேலி றோட் (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (3796)

### எம். ஜி ஆர். திருமண சேவை

வெளிநாடுகளில் பிரபல தொழில் புரியும் ஆண்களுக்கு பொருத்தமான மணமக்கள் தேவை இலங்கை, சிங்கப்பூர் திருமணம். வே. புண்ணியமூர்த்தி, புத்தூர் சந்தி, மீசாலை. (3367)


# யாழ். பல்கலைக்கழகத்தின் கொழும்புகளஞ்சியத்திற்குசீல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தின் கொழும்பில் உள்ள களஞ்சியம் பொலிசாரால் ''சீல்' வைக்கப்பட்டுள்ளது.

கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்தின் பணிப்புரையைத் தொடர்ந்தே இக் களஞ்சியத்திற்கு சீல் வைக்கப்பட்டதாக தெரியவருகிறது. யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தேவையான சிலபொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக கொழும்பில் தங்கியிருந்த இப்பல்கலைக்கழகத்தின் உதவி நிதியாளர் திரு. எஸ். காந்தமூர்த்தி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இப்பல்கலைக் கழகத்தின் மேற்படி களஞ்சியத்துக்கும் சீல் வைக்கப்பட்டிருக்கிறது

இப்பல்கலைக்கழகம் கொள்வனவு செய்த பொருள்களில் ஆய்வு கூடப்பாவனைக்குத் தேவையான பல இரசாயனப் பொருள்களும் அடங்கியிருந்ததாக கூறப்படுகிறது. மேற்படி இரசாயனப் பொருள்கள் வெடிபொருள்களை தயாரிக்கப்பயன்படுத்த முடியுமென்று கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகம் கருதுகிறது.

இப் பல்கலைக்கழக உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டதற்கும், களஞ்சியம் சீல் வைக்கப்பட்டதற்கும் மேற்படி காரணமும் ஒன்றாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது

கைது செய்யப்பட்ட மேற்படி உத்தியோகத்தர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் இவர் மீதான விசாரணை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படடு வருகிறது இவ்விசாரணைக்காக சில ஆவணங்கள் இப்பல்கலைக்கழகத்திலிருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இவ்விடயம் சம்மந்தமாக இப்பல்கலைக்கழகத்தின் பதிவாளர் கொழும்பு செல்லவுள்ளார். கொழும்பு செல்லும் இவர் கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்துடன் மேற்படிவிடயம் குறித்து பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சினிமா பார்ப்பவர் தொகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சினிமா பார்ப்பவர்களின் தொகை வருடாவருடம் குறைந்து வருவதாகப் புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. தியேட்டர்களுக்கு சென்று சினிமா பார்ப்போர் தொகை 1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் படிப்படியாக குறைவடைந்து வருவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. 1979 ஆம் ஆண்டில் தியேட்டர்களுக்கு சென்று சினிமா பார்ப்போர் தொகை ஏழு கோடியே நாற்பது இலட்சமாக இருந்தது. ஆனால் கடந்த வருடத்தில இத்தொகை மூன்று கோடியே பத்து இலட்சமாக குறைவடைந்துள்ளது. நாட்டிலிருந்த சினிமா தியேட்டர்களின் எண்ணிக்கையும் 365 இலிருந்து 250 ஆகக் குறைந்துள்ளது.

## பொதுக்கூட்டம்

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபதுதில் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப 3-00 மணிககு நிலையத் தலைவர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெறும்.

நிலையத்தின் சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தருமபடி நிலையச் செயலாளர் திரு. க. தில்லைநாதன் தெரிவித்துள்ளார். (24)

# கலைப்பீட மாணவருக்கும் கம்பியூட்டர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக கழகத்தில் கலைப்பீட மாணவர்களுக்கும் கம்பியூட்டர் பயிற்சிநெறி வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.

இதற்கென 40 லட்சம் ரூபா பெறுமதியான பதினைந்து கம்பியூட்டர் இயந்திரங்களை யாழ் பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுப்பி வைத்துள்ளது.

இப்பயிற்சி நெறிகள் யாவும் 1991-1992கல்வியாண்டு மாணவர்களுக்கே ஜனவரிமாதம் முதல் முதன்முதலாக வழங்கப்படவுள்ளது. கம்பியூட்டர் பயிற்சிநெறி விரைவில ஏனைய வருடங்களைச்சேர்ந்த கலைப்பீட மாணவர்களுக்கும் கற்பிக்கநடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது (05)

# கிளிநொச்சியில்கம்புபயிர்செய்கையும் கம்பு மா அறிமுகமும்

கிளிநொச்சிப் பகுதிகளில் கம்பு பயிர்ச் செய்கையை ஊக்குவித்து கம்புமாவினை அறிமுகப்படுத்துவதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் தற்பொழுது ஈடுபட்டு வருகின்றது.

கிளிநொச்சி கோட்டத்தில் மேற்கு, தெற்கு பகுதிகளிலும் துணுக்காய், பாண்டியன்குளம், மாங்குளம், விஸ்வமடு ஆகிய இடங்களிலும் உள்ள முன்னோடி விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மாதிரி பயிர் செய்கைக்காக கம்பு தானியம் விநியோகிக்கப்படுகின்றது.

இவ்வாறு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் கம்பு தானியத்திலிருந்து பெறப்படும் கம்பு மாவை கிராமிய உற்பத்திக் குழுக்களின் ஊடாக மக்களுக்கு அறிமுகப்படுத்தும் திட்டத்திற்கமையவே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் இவ்வாறு செயற்பட்டு வருகின்றது.

# வடிகாலை தடைசெய்வது சட்டவிரோத குற்றம்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சிறந்ததும், திறம்பட செயற்படக் கூடியதுமான மழை நீர் வடிகாலமைப்பு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அமைக்கப்பட்டுள் ... வாரம் பொது ஸ்தாபனங்களுக்கும், பொதுமக்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

வீடுகள், பொதுஸ்தாபனங்களுக்கு அருகால் செல்லும் வடிகால்களை எவ்விதத்திலும் தடை செய்யாது ...

# பரிசளிப்பு விழா

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அதிபர் தலைமையில் நாளை 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 1. 30 மணிக்கு நடைபெறும்.

இவ் விழாவிற்குப் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கமும், கோட்டக் கல்வி, கொத்தணி அதிபர்களும் பங்குபற்றிச் சிறப்பிக்க உள்ளனர். [24]

# யோகபுரம் கிராமத்திற்கு குடிநீர் கிணறு அமைப்பு

உரும்பராய் யோகபுரம் கிராம மக்களின் பாவனைக்கென புதிய குழாய்கிணறு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதுடன் இரண்டு கிணறுகள் திருத்தப் பட்டுள்ளன.

கிராம மக்களின் ஒத்துழைப்புடன் சிரமதானத்தின் மூலம் அமைக்கப்பட்ட இந்தப் புதிய குழாய் கிணற்றிற்கும், திருத்தப்பட்ட கிணறுகளுக்கும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் கைத்தொழில் பகுதியில் தயாரிப்பான வழுக்கை பம்பிகள் இலவசமாகப் பொருத்தப்பட்டது.

மாவீரர் வாரத்தை ஒட்டி மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் மாவீரர் வாரத்தில் வைபவரீதியாக மக்களின் பாவனைக்கு திறந்து வைக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

# கண்டியில் தமிழர் வீடுகள் நள்ளிரவில் சுற்றிவளைப்பு

(கண்டி)

கண்டி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நள்ளிரவு நேரம் திடீர் சுற்றிவளைப்புகளும் தேடுதல் வேட்டையும் தொடர்ந்து நடாத்தப்பட்டு வருகிறது.

அம்பிட்டிய, மீகணுவ, குண்டசாலை ஆகிய பகுதிகள் உட்பட மேலும் சில இடங்களிலும் இவ்வாறான நள்ளிரவு நேர தேடுதல் நடைபெற்றுவருகிறது.

மேற்படி பகுதிகளை கடந்த ஞாயிற்றுக்கிழமை சுமார் 500 இற்கும் மேற்பட்ட பொலிசார் சுற்றிவளைத்தனர். இங்குள்ள தமிழர்களின் வீடுகள் ஒவ்வொன்றாக சோதனையிடப்பட்டன.

இச்சோதனையின் போது மேற்படி பகுதிகளில் இருந்து ஐந்து பேர் வரை கைது செய்யப்பட்டனர். இவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். வெளியார் எவரையும் வீடுகளில் தங்க அனுமதிக்கக் கூடாது என்று மேற்படி பகுதி மக்களுக்கு பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# மதுவரி ஊழியர்களுக்கு சம்பளமில்லை

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டைச் சேர்ந்த மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த சகலதர ஊழியர்களுக்கும் மூன்று மாதங்களாக எதுவித சம்பளக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இம் மூன்றுமாத சம்பளப் பணமும் இன்றுவரை கிடைக்கவில்லையெனக் கொழும்பிலுள்ள தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டும் இன்னும் வேதனம் கிடைக்கவில்லை என ஊழியர்கள் ஆழ்ந்த கவலையும், மனவேதனையும் அடைந்துள்ளனர்.

# சேவை நலம் பாராட்டு விழா

கோப்பாய் வைத்தியசாலையில் வைத்தியர்களாக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி தி கோபாலரத்தினம், மு. தியோகேசபிள்ளை மற்றும் இடமாற்றம் பெற்றுச் செல்லும் ம. யோகவிநாயகம், திருமதி வ. யோகவிநாயகம் ஆகியோருக்கான சேவை நலம் பாராட்டு விழா எதிர்வரும் ஞாயிறன்று பிற்பகல் மூன்று மணியளவில் வைத்தியசாலை முன்றலில் இடம் பெறவுள்ளது. பல்வேறு அமைப்புக்களை சார்ந்த பிரமுகர்களின் பாராட்டுரையும் விருந்தினர்களின் பதிலுரையும் இங்கு இடம் பெறவுள்ளது.

தெரிவுக்குழுவின்

# இறுதி அறிக்கை அடுத்த மாதம் வெளிவரும்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைப் பரிந்துரைக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் தமது இறுதி அறிக்கையை அடுத்த மாதம் வெளியிடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் முன்வைத்த சர்ச்சைக்குரிய பத்து அம்சத் திட்டத்தைத் தெரிவுக்குழு ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது. எதற்கும் தெரிவுக்குழு வெளியிட இருக்கும் அறிக்கையில் எல்லாம் தெளிவாகத் தெரிவிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

## கருத்தரங்கு

இன்று பிற்பகல் மூன்றுமணியளவில் கலைவட்டத்தின் ஆதரவில் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் கருத்தரங்கொன்று இடம்பெறவுள்ளது. இவ் அரங்கில் ''இராகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்'' என்னும் பொருளில் செ ந. நடராஜ ஐயர் உரையாற்றவுள்ளார்.

# 'பொலோமி' பரீட்சை விண்ணப்பம் கோரல்


சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ.)

## முக்கிய அறிவித்தல்

### பங்குப்பணம் ரூபா 100/-

06-03-1992 இல் திருத்தியமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின்படி உப விதி 18 (1) அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூபா 100/- ஆக வைத்திருக்கத் தவறும் பட்சத்தில் கிளைக்குழுத் தேர் ...

(3797)

## ENGLISH
(ஆங்கிலம்)

SPOKEN ENGLISH WITH GRAMMAR AND LITERATURE.BY KANDASAMY 87, திருநெல்வேலி றோட் (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (3796)

## எம். ஜி ஆர். திருமண சேவை

வெளிநாடுகளில் பிரபல தொழில் புரியும் ஆண்களுக்கு பொருத்தமான மணமகள்கள் தேவை இலங்கை, சிங்கப்பூர் திருமணம். வே. புண்ணியமூர்த்தி, புத்தூர் சந்தி, மீசாலை. (3367)

## விசேட பொதுக் கூட்டம்

யாழ் மாவட்ட சிக்கனகடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 27ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகள் யாவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். பொதுச் சபைக் கூட்டத்திற்கான அதிகாரக் கடிதத்தைப் பிராந்திய உதவிச் செயலாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். கூட்டத்திற்கு சமுகமளிக்கும் போது இக் கடிதத்தை சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலவச சீருடை விநியோகம்

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக குரும்பசிட்டியில் இருந்து இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு குரும்பசிட்டி சன்மார்க்கசபை இலவச சீருடைகளை வழங்க முன் வந்திருக்கிறது.

எதிர்வரும் 19 ஆம் திகதி மாலை 3 00 மணியளவில் மருதனார்மடத்திலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் இலவச சீருடை வழங்கும் வைபவம் நடைபெற இருக்கிறது. கலாகேசரி தம்பித்துரை தலைமையில் நடைபெற இருக்கும் இவ் வைபவத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா மாணிக்கவாசகர், வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கா. சந்திரராஜா ஆகியோரும்கலந்துகொள்வர்.

பெறுமதியான பதினைந்து கம்பியூட்டர் இயந்திரங்களை யாழ பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுப்பி வைத்துள்ளது.

இப்பயிற்சி நெறிகள் யாவும் 1991-1992கல்வியாண்டு மாணவர்களுக்கே ஜனவரிமாதம் முதல் முதன்முதலாக வழங்கப்படவுள்ளது.

# வடிகாலை தடைசெய்வது சட்டவிரோத குற்றம்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சிறந்ததும், திறம்பட செயற்படக் கூடியதுமான மழை நீர் வடிகாலமைப்பு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அமைக்கப்பட்டுள்ளது. இவற்றைத் திறம்படப் பேணல், பொது மக்களுக்கு வெள்ளத்தால் ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்க மிக அவசியமானதாகும்.

மேற்படி மழை வெள்ள வடிகால்களை நிரவுதலோ, சுயமான நீரோட்டத்தை தடை செய்தலோ மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் 1 2ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். இதனை மீறும் பட்சத்தில் தண்டப்பணம அறவிடுவதற்கும் அச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை மராமரத்துப் பொறியியலாளர் திரு எம்.இராமதாசன் அவர்களால் வடிகால் நிரவுதலும், நீரோட்டத்தைத் தடை செய்தலும்'' என்ற தலைப்பில் சுற்று நிருபங்கள் கடந்த வாரம் பொது ஸ்தாபனங்களுக்கும், பொதுமக்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

வீடுகள், பொதுஸ்தாபனங்களுக்கு அருகால் செல்லும் வடிகால்களை எவ்விதததிலும் தடை செய்யாது, துப்புரவாக வைத்திருப்பதற்கு யாழ் மாநகர சபையுடன் ஒத்துழைக்குமாறு அவர் கோரியுள்ளார். (24)

4ம் ஆண்டு நினைவு



வரசிங்கம சிவதாசன்
தோற்றம் 9. 8. 1969 மறைவு 11. 12. 1988

அன்பின் நினைவுகூர
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.
நவாலிவடக்கு,
மானிப்பாய் (3773)

## கம்பு மா அறிமுகமும்

கிளிநொச்சிப் பகுதிகளில் கம்பு பயிர்ச் செய்கையை ஊக்குவித்து கம்புமாவினை அறிமுகப்படுத்துவதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் தற்பொழுது ஈடுபட்டு வருகின்றது.

கிளிநொச்சி கோட்டத்தில் மேற்கு. தெற்கு பகுதிகளிலும் துணுக்காய், பாண்டியன்குளம், மாங்குளம், விஸ்வமடு ஆகிய இடங்களிலும் உள்ள முன்னோடி விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மாதிரி பயிர் செய்கைக்காக கம்பு தானியம் விநியோகிக்கப்படுகின்றது.

இவ்வாறு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் கம்பு தானியத்திலிருந்து பெறப்படும் கம்பு மாவை கிராமிய உற்பத்திக் குழுக்களின் ஊடாக மக்களுக்கு அறிமுகப்படுத்தும் கட்டத்திற்கமையவே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் இவ்வாறு செயற்பட்டு வருகின்றது.

## நினைவஞ்சலிக் கூட்டம்

லெப். கேணல் பொன்னம்மான் வீடமைப்பு திட்டத்தில் மாவீரர் நினைவஞ்சலிக்கூட்டமொன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது கப்டன் திருச்செல்வத்தின் ஐந்தாவதுஆண்டு நினைவு கூரப்பட்டதுடன், டிசம்பர் மாதத்தில் வீரச்சாவை அடைந்த திருக்கோணமலை மாவட்டப் போராளிகளும் மற்றும் மாவீரர்களும் இங்கு நினைவு கூரப்பட்டனர்.

இதற்கு முன்பாக காலை எட்டுமணி தொடக்கம் இக் குடியிருப்பில் வாழும் பல்வேறு குடும்பங்களையும் சேர்ந்த பல குழுக்களுக்கும் இடையிலான கரபந்தாட்ட சுற்றுப் போட்டியும் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சூட்டடுப்புகள் இலவச விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக கழகத்தின் சக்திப் பகுதியினர் இருநூறு இரட்டைச் சூட்டடுப்புக்களை வசதி குறைந்த குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளனர்.

மாவீரர் வாரத்தை ஒட்டி இந்த அடுப்புகள் உரும்பராய், செல்வபுரம் பகுதியிலுள்ள 25 குடும்பங்களுக்கும், கைதடியிலுள்ள .50 குடும்பங்களுக்கும். ஆனைக்கோட்டை முள்ளிக் கிராமத்தைச் சேர்ந்த 25 குடும்பங்கள் உட்பட வடமராட்சி மற்றும் தீவகம் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# 'பொலோமி' பரீட்சை விண்ணப்பம் கோரல்

1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள பொலோமி ஆங்கிலப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்குரிய விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

# விசர்நாய் பிடிக்கும் செயல் தொடர்ந்து நடக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விசர்நாய்களை தேடிப்பிடிப்பதில் யாழ் மாநகரசபை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கட்டாக்காலியாக வீதிகளிலும் மற்றும் பொது இடங்களிலும் அலைந்து திரியும் நாய்களை தேடிப்பிடிப்பதற்காக மாநகர சபையின் நாய் பிடிக்கும் பிரிவினர் வெவ்வேறு குழுக்களாகப் பிரித்து செயற்பட்டு வருகின்றனர் இவ்வாறான நாய்கள் தேடிப்பிடிக்கப்பட்டு வண்டிகளில் ஏற்றி அடைக்கப்பட்டுநகரப்பகுதியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. குருநகர், பாசையூர். ஓட்டுமடம்,யாழ். நகரம் ஆகிய பகுதிகளில் கடந்த வாரம் மேற்படி நாய்களைத் தேடி அழிக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (42)

## உதவிக் கொடுப்பனவுகள்

பண்டத்தரிப்பு. பிரான்பற்று. இளவாலை, மாரீசன் கூடல், மாதகல், 4ம் மாதகல் மேற்கு ஆகிய தபால் அலுவலகங்களிலிருந்து பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளைச் பெற்று வந்த பொது மக்கள். புரட்டாதி. ஐப்பசி மாதங்களுக்கான கொடுப்பனவுகளை சங்கானை தபால் அலுவலகத்தில் தற்காலிகமாக இயங்கும் பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளும்படி பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி கொடுப்பனவுகள் தற்பொழுது மேற்கொள்ளப்படுகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைப் பரிந்துரைக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் தமது இறுதி அறிக்கையை அடுத்த மாதம் வெளியிடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கருத்தரங்கு

இன்று பிற்பகல் மூன்றுமணியளவில் கலைவட்டத்தின் ஆதரவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் கருத்தரங்கொன்று இடம்பெறவுள்ளது. இவ் அரங்கில் ''இராகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்'' என்னும் பொருளில் செ ந. நடராஜ ஐயர் உரையாற்றவுள்ளார்.

## வீரவணக்கக் கூட்டம்

மன்னார் மாவட்டத்தில் முதன் முதலாக வீரச்சாவடைந்த தற்கொடையாளன் மாவீரர் லெப். நிதியின் எட்டாவது வீரவணக்கக்கூட்டம் நாளை வெள்ளியன்றுமாலை ஆறுமணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் சிறப்புரைகளைத் தொடர்ந்து கலை பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## ஒத்திவைப்பு

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருந்த ''யூனிற் ரஸ்ட்'' தொடர்பான கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திப் போடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பினர் முன்வைத்த சர்ச்சைக்குரிய பத்து அம்சத் திட்டத்தைத் தெரிவுக்குழு ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது. எதற்கும் தெரிவுக்குழு வெளியிட இருக்கும் அறிக்கையில் எல்லாம் தெளிவாகத் தெரிவிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

கான சேவை நலம் பாராட்டு விழா எதிர்வரும் ஞாயிறன்று பிற்பகல் மூன்று மணியளவில் வைத்தியசாலை முன்றலில் இடம் பெறவுள்ளது.பல்வேறு அமைப்புக்களை சார்ந்த பிரமுகர்களின் பாராட்டுரையும் விருந்தினர்களின் பதிலுரையும் இங்கு இடம் பெறவுள்ளது.


சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ.)

## முக்கிய அறிவித்தல்
## பங்குப்பணம் ரூபா 100/-

06-03-1992 இல் திருத்தியமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின்படி உப விதி 18 (1) அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூபா 100/- ஆக வைத்திருக்கத் தவறும் பட்சத்தில் கிளைக்குழுத் தேர்தலிலோ, பொதுச் சபையிலோ, நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது எனவே 31-01-1993 க்கு முன்னர் தங்கள் பங்குப் பணத்தை ரூபா 100/- ஆக ஆக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர் தலைவர்
(சி/5598)


## நினைவு கூருகின்றோம்...

**1992-12-17**

1986-ம் ஆண்டு இதே தினத்தில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த-
சுரேஷ் (க, தயானந்தன்- கோட்டைக்கல்லாறு - மட்டக்களப்பு)

1988-ம் ஆண்டு நெடுந்தீவுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-
லெப். ரவி (இராமச்சந்திரன் ரவிச்சந்திரன்- ஓடக்கரை, பருத்தித்துறை - யாழ். )

அப்பாறை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்புப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3- தமிழர்கள்.

1989-ம் ஆண்டு வீரச்சாவெய்திய-
பாஸ்கரன்/ரஞ்சன் (பொற்பதி வீதி, கொக்குவில்- யாழ். )

1990-ம் ஆண்டு மட்டக்களப்பில் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மட்டு- ஈரலிகுளம் பெரிய புல்லுமலைப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞன் உட்பட 2- தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5597]

### சிந்தனைக்கு

தவறான வழிதான், எப்பொழுதும் பொருத்தமான வழிபோலக் காட்சியளிக்கிறது.

- ஜார்ஜ் மூர் -


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 17- 12- 1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண் - 05


## தப்பான நோக்கு

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் முடிந்த முடிவு என்ற ரீதியில் சிறிலங்கா அரசாங்கம் செயற்பட்டு வருவதை உணர முடிகின்றது. விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தம் தொடர்பாகவும், பேச்சுவார்த்தை தொடர்பாகவும் விடுத்துள்ள அறிவித்தல்களை கருத்திற் கொள்ளாததோடு, பாராளுமன்ற தெரிவுக்குழு தோல்வியில் முடிவடைந்துள்ளமையும் இவற்றை வெளிக்காட்டப் போதுமானவையாகவே உள்ளன.

அதாவது பிரேமதாசா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை அடைத்துவிட்டு இராணுவத் தீர்விற்கான வழிமுறைகளில் தீவிர அக்கறை காட்டி நிற்கின்றது. இதன் பிரகாரம் இராணுவத்திற்கு புதிய தளபாடங்களை கொள்வனவு செய்து நவீனப்படுத்துவதோடு, இராணுவத்தினருக்கு தற்பொழுது உள்ள குறைபாட்டையும் தீர்ப்பதில் அக்கறை காட்டி வருகின்றது. அதாவது இராணுவத்தைப் போருக்கு தயாராக்கும் நடவடிக்கையில் அரசு முனைப்பாக ஈடுபட்டுள்ளது.

ஆனாலும், கடந்த இரண்டரை வருடப்போர் அனுபவம் விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் வெற்றிகொள்வதென்பது இலகுவில் சாத்தியப்பாடானதொன்றல்ல என்பதைத் தெளிவாக உணர்ந்துள்ள சிங்கள இராணுவத் தரப்பினர், தற்பொழுது நடைமுறையிலுள்ள பொருளாதார மற்றும் எரிபொருள் தடை என்பவற்றை மேலும் தீவிரமாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதாவதுபொருளாதார அழுத்தத்துடன் கூடிய ஓர் இராணுவ அழுத்தத்தைப் பிரயோகிப்பதன் மூலம் வெற்றி பெறலாம் என எண்ணுகின்றனர்.

ஆனால் இராணுவத்தின் ஓர் புதிய தந்திரோபாயமல்ல இது. இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகியதிலிருந்து ஒரு பொருளாதாரத் தடையை சிங்கள அரசாங்கம் நடைமுறைப் படுத்தியே வந்துள்ளது. அத்தோடு, கடந்த வருடத்தின் இறுதியிலிருந்து ஓரளவு குடாநாட்டை முற்றுகை நிலையிலேயே இராணுவம் வைத்துள்ளது. அத்தோடு, வடபகுதிக்கான பொருள் விநியோகத்திற்கு கூட்டுப்படைகளின் தலைமையகத்தில் அனுமதிபெற வேண்டும் என்ற கட்டுப்பாட்டையும் செயற்படுத்...

### இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு

# ஏமாற்றுக்கள் தொடர்கதை

# தெரிவுக்குழு மற்றொரு உதாரணம்

பாராளுமன்றத் தெரிவுக் குழு பலரும் எதிர்பார்த்தது போலவே பிசுபிசுத்துப் போயுள்ளது. இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் முன்னைய ஆட்சித் தலைவர்களை விடவும் தமக்கு ஆர்வம் அதிகமாக இருப்பதாக காட்டிக் கொண்ட பிரேமதாசா தமது பதவிக்காலத்தின் ஏறத்தாழ அரைப் பங்கை கடந்து விட்டார். அனைத்து கட்சி மாநாடு என்று ஆர்ப்பாட்டமாக ஆரம்பித்த அவர், ஏறத்தாழ ஒரு வருட இழுத்தடிப்புக்குப பின்னர் அதன் அமர்வுகளை சத்தமின்றி நிறுத்த பாராளுமன்றத் தெரிவுக்குழு கை கொடுத்தது. இதன் மூலமாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண அரசாங்கம் விடாமுயற்சியுடன் அல்லும் பகலும் அயராது பாடுபடுவதாக தொடர்பு சாதனங்கள் முழங்கின. எனினும் வயதான காலத்தில் நோய் வாய்ப்பட்டு படுக்கையாக இருக்கும் நோயாளியை அவர் இனிப் பிழைக்க மாட்டார் இயற்கை மரணத்தை தழுவிக் கொள்ளட்டும் என்று சில டாக்டர்கள் கைவிட்டு விடுவதைப் போல இலங்கையின் ஐக்கியம் ஒருமைப்பாடு என்பனவும் இயற்கையான மரணத்தை தழுவிக் கொள்வதற்கு தென்னிலங்கை அரசியல் வாதிகள் மீண்டுமொருமுறை வழி சமைத்து விட்டனர்.

இந்த நிலையில் கடந்த காலங்களில் இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் எப்படிச் சிங்களப் பேரினவாதிகளால் முறியடிக்கப்பட்டன என்பதைசுருக்கமாகவும், பிரேமதாசாவின் அடுத்த திட்டம் என்னவாக இருக்கும் என்பது பற்றியும், பரிசீலனை செய்வது பொருத்தமானதாக இருக்கும் எனலாம்.

பண்டா - செல்வா ஒப்பந்தம், ஏற்பட்ட போதும், டட்லி - செல்வா உடன் படிக்கை உருவான போதும் தமிழரசுக் கட்சி பெரும்பாலும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் நிறுத்தப்படுவதற்கு அரசியல் சாசன ரீதியான வழியைத் தேடுவதிலேயே அக்கறை காட்டியிருந்தது எனலாம். ஆனால் இந்த ஒப்பந்தமும், உடன் படிக்கையும் ...

...ளாயிலும், கல்லோயாவிலும், சிங்களக் குடியேற்றங்கள் பிரமாண்டமாக உருப்பெற்றிருந்தன.

1970ல் பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் புதிய அரசியலமைப்பை வரையத்திட்டமிட்டு அரசியல் நிர்ணயசபை அமைக்கப்பட்ட போது தமிழரசுக் கட்சி தான் முன்வைத்துவந்தசமஷ்டிக்கோரிக்கையிலிருந்து எத்தனையோ படி இறங்கிப் போய் ஒரு ஆறு அம்சக் கோரிக்கையை சமர்ப்பித்தது. பெரும்பாலானதமிழ் அரசியல் கட்சிகளின் ஒப்புதலோடு முன்வைக்கப்பட்டஆறு அம்சக் கோரிக்கையை அரசாங்கம் ஏறெடுத்துப் பார்க்கவும் தயங்கிய போது தான் தமிழ் மக்கள் தனி நாட்டுக்கான போராட்டத்தை முன்னெடுக்கலாயினர்.

அதாவது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி தினசரி ஐந்து புகையிரத சேவை நடத்தப்பட்டு 'லக்ஷபானா' மின் ஒளியில் தமிழ்ப் பிரதேசம் மூழ்கிப் போயிருந்த நிலையிலும், குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பிரதான உற்பத்தியான செத்தல் மிளகாயும், வெங்காயமும் நல்ல சந்தைவாய்ப்பை பெற்றிருந்த அந்தச் சூழலிலும் தான் தமிழ் மக்கள் உதயசூரியனுக்கு வாக்களித்ததன் மூலம் தமது எண்ண வேட்கையை ஜனநாயக பூர்வமாக வெளிப்படுத்தியிருந்தனர்.

எனினும் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுக் கொண்டவர்கள் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு முன்னால் மண்டியிட்ட போதும் கூட உரிய அதிகாரங்களை வழங்கி மாவட்ட அபிவிருத்தி சபைகளைப் பலப்படுத்துவதை விடவும், பயங்கரவாத தடைச் சட்டத்தை அறிமுகமாக்கி தமிழ் இளைஞர்களை வேட்டையாடுவதிலேயே சிறிலங்கா அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியது. இதற்காக இராணுவத்தையும் ஏவிவிட்டது.

1984லும் சர்வகட்சிமாநாடு என்று கூட்டப்பட்டு 'இணைப்பு சி' என்றொரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்ட போதும் அதனைக் குழப்பும் வகையில்தான் அரசு செயற்பட்டது. அதாவது அர...

...என்று அமைக்கப்பட்டமாநாட்டில் மதவாத அமைப்புக்களை அனுமதித்ததன் மூலமும், இஸ்ரேலிய மொசாட் மற்றும் வெளிநாட்டுக் கூலிகளை வரவழைத்து இராணுவ நடவடிக்கையைத் தீவிர மாக்கியதன் மூலமும் இந்தத் தீர்வுத் திட்டம் குப்பைத் தொட்டிக்குள் சென்றடையவைக்கப்பட்டது.

பின்னர் 1985ல் திம்புவில் விடுதலை இயக்கங்களுடன் சிறிலங்கா அரசாங்கம் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்த முற்பட்ட போது நான்கு அம்சக் கோரிக்கை ஏகோபித்த அபிப்பிராயத்தின் பேரில் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதனை நிர்த்தாட்சண்யமாக நிராகரித்த சிறிலங்கா அரசு விசேட அதிரடிப் படைகளை உருவாக்குவதிலும், தமிழர் தாயகத்தை இராணுவ முகாம்களால் நிறைப்பதிலுமே அக்கறை காட்டியது.

இதன் பின்னர் கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறை மாவட்டத்தைப் பிரித்தெடுக்கும் 'டிசம்பர் 19 யோசனைகள்' 1986 இல் முன்வைக்கப்பட்ட அதே வேளையில் தான் அம்பாறை மாவட்டத்தின் தங்க வேலாயுத புரத்திலும், மட்டக்களப்பின் கொக்கட்டிச்சோலையிலும். திருக்கோணமலையில் பெருவெளி, துவரங்காடு பகுதிகளிலும், வவுனியாவின் ஒதியமலையிலும் இன்ன பிற இடங்களிலும் தமிழ் மக்கள் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பும் கூட அந்த ஒப்பந்தத்தின் கீழ் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பதிலாகத் தமிழ் மக்களைப் பலவீனப்படுத்துவதிலேயே சிறிலங்கா அரசு கவனம் செலுத்தியது. உதாரணமாகத் தடுப்புக் காவல் கைதிகளின் விடுதலை, அரசியலமைப்பைத் திருத்தும் நடவடிக்கைகள் போன்றவற்றை வேண்டுமென்றே திட்டமிட்டுத் தாமதப் படுத்தி வந்த சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதம் களையப்பட வேண்டும் என்பதிலேயே ஆர்வம் காட்டியது

மற்றவர்களின் அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக்...

...தமது சொந்த அனுபவங்களிலிருந்து கூடப் பாடம் கற்றுக் கொள்ள மறந்தமையின் காரணமாக தமது அரசியல் வாழ்வைத் தக்க வைத்துக் கொள்ள கொழும்பில் நிலை கொண்டுள்ள தமிழ்க் குழுக்கள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாட்டிற்கு ஒத்தூதினர். அரசாங்கம் அரசியல் தீர்வைக் காண 'உண்மையாகவே' முயல்கிறது எனக் காட்டவும், விடுதலைப் புலிகள் தலைமையில் தமிழ் மக்கள் முன்னெடுக்கும் விடுதலைப் போராட்டத்தை வெறும் 'பயங்கர வாதப்' போராகச்சித்திரிக்கவும்கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் துணை போயின.

### 3 வருட ஆட்சியும் தீர்வு முயற்சியும்

வடக்கு கிழக்குப் பகுதிகளில் இந்திய இராணுவம் நிறைந்திருக்க தென்னிலங்கையில் ஜே.வி.பியின் கிளர்ச்சி முனைப்புப்பெற்ற காலப்பகுதியில் ஜனாதிபதி பதவிப் பொறுப்பை எட்டிப்பிடித்த பிரேமதாசா இந்திய இராணுவத்தை வெளியேற்றுவது, ஜே.வி பியை அடக்குவது, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பவற்றையே தனது பிரதான இலக்குகளாக காட்டினார். கலந்துரையாடல், கருத்திசைவு, விட்டுக்கொடுப்பு என்பதுவே தனது வழியென ப்பிரகடனம் செய்து கொண்டார் விடுதலைப்புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பெறுபேறாக இந்திய இராணுவம் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டதும், அதனைத் தனது வெற்றியாக பிரமாதப்படுத்திக் கொண்டார் பிரேமதாசா இதன் மூலம் ஜே.வி.பியை நசுக்குவதற்காக 60,000க்கும் அதிகமானோர் கொன்று குவிக்கப்பட்டதும் சாதாரண மக்களின் அரசியல் கண்ணுக்கு மறைக்கப்பட்டது. பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் எதுவாக இருந்தாலும் பேசித் தீர்ப்போம் என்று பிரேமதாசா பகிரங்கமாக அழைப்பு விட்டபடியே இருக்க படையினர் ஜே வி பி.யினரை கொன்றொழித்தனர் என்பதை இங்கு...

...மானதாகும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை என ஆரம்பித்தவர், பின்னர் அதனை அனைத்து அரசியல் கட்சிகளின் மாநாட்டில் ஒப்படைத்தார். பேச்சுவார்த்தை தொடர்ந்த காலத்திலும் கூட முன்வைக்கப்பட்ட அடிப்படையான சில அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்ற பிரேமதாசா அரசு முன்வரவில்லை உதாரணமாக தமிழீழக் கோரிக்கையை சட்டவிரோதமானதாக பிரகடனம் செய்யும் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை குறிப்பிடலாம். எனினும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தானும், தனது அரசும் பெருத்த ஆர்வத்தோடு இருப்பதாகவே பிரேமதாசாதொடர்ந்துகாட்டிக் கொண்டார். இதற்கு கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும் ஒத்தூதின. இனப்பிரச்சினை தீர்வுக்கு விடுதலைப் புலிகள் தான் தடையாக இருக்கின்றனர் என்பது போலவும், பிரேமதாசாவுடன் நயமாகப் பேசி உரிமைகளை வென்றெடுத்து விடலாம் என்பது போலவும் இவர்கள் நடந்து கொண்டிருந்தனர்.

ஆக பிரேமதாசாவின் மூன்று வருட ஆட்சியில் விடுதலைப் புலிகளுடனானபேச்சுவார்த்தைக் காலமாக ஓராண்டு கழிந்து போனது. மற்றொரு ஆண்டு அனைத்து அரசியல் கட்சி மாநாட்டுநடவடிக்கைகளுடன் ஓடிப் போனது. மூன்றாவது ஆண்டு பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளோடுமுடிவுக்கு வந்துள்ளது.

இனி, பாராளுமன்றத்தில் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மையும், மற்றொருபதவிக்காலமும் கிடைத்தால் தான்இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்று கூறிக் கொண்டு தேர்தல் நடத்த பிரேமதாசா அரசு முன்வரலாம். அல்லது இராணுவ நடவடிக்கைகளைமேலும்முடுக்கி விட்டு தமிழ் மக்களைக் கொன்றொழிக்க பிரேமதாசா அரசு முற்படலாம் அல்லது இரண்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படலாம். இவற்றின் மூலமாக இரண்டாவது பதவிக் காலத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் பிரேமதாசா முனைந்து நிற்கலாம் ஆனால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கோ, தமிழ் மக்களின் எண்ண வேட்கையை பூர்த்தி செய்வதற்கோ அவர் முற்படப் போவதில்லை என்பது தெளிவு.

வெற்றிகொள்வதென்பது இலகுவில் சாத்தியப்பாடானதொன்றல்ல என்பதைத் தெளிவாக உணர்ந்துள்ள சிங்கள இராணுவத் தரப்பினர், தற்பொழுது நடைமுறையிலுள்ள பொருளாதார மற்றும் எரிபொருள் தடை என்பவற்றை மேலும் தீவிரமாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதாவது பொருளாதார அழுத்தத்துடன் கூடிய ஓர் இராணுவ அழுத்தத்தைப் பிரயோகிப்பதன் மூலம் வெற்றி பெறலாம் என எண்ணுகின்றனர்.

ஆனால் இராணுவத்தின் ஓர் புதிய தந்திரோபாயமல்ல இது. இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகியதிலிருந்து ஒரு பொருளாதாரத் தடையை சிங்கள அரசாங்கம் நடைமுறைப் படுத்தியே வந்துள்ளது. அத்தோடு, கடந்த வருடத்தின் இறுதியிலிருந்து ஓரளவு குடாநாட்டை முற்றுகை நிலையிலேயே இராணுவம் வைத்துள்ளது. அத்தோடு, வடபகுதிக்கான பொருள் விநியோகத்திற்கு கூட்டுப்படைகளின் தலைமையகத்தில் அனுமதிபெற வேண்டும் என்ற கட்டுப்பாட்டையும் செயற்படுத்தியே வந்தது.

இந்நிலையிலும் மீண்டும் பொருளாதாரத் தடையைத் தீவிரமாக்க சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது அதாவது தமிழ்மக்களைப் பட்டினிபோட்டு பணியவைப்பதன் மூலம் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியாகவெற்றி கொண்டுவிடலாம் என சிங்கள ஆட்சியாளர்கள் எண்ணுவதாகத் தெரிகின்றது. சிறிலங்கா அரசு மேற்கொள்ள முற்படும் இந் நடவடிக்கையானது அநாகரிகமானதொன்று அப்பாவி மக்களை பட்டினி போடுவதன் மூலம் போரை வெற்றி பெற எண்ணுவது மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட செயலுமாகும். ஆனால் இந்நடவடிக்கை தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை அழித்து விட உதவும் என எண்ணின் அது அரசிற்கு ஏமாற்றமாகவே முடியும். ஏனெனில் பல தடைகளையும் நெருக்கடிகளையும் இப்போராட்டம் கண்டுள்ளது. அதை தாண்டியும் வந்துள்ளது.

மறுவளமாக இந் நடவடிக்கை தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை மேலும் தீவிரமாக்குமே ஒழிய ஒருபோதும் தோல்வியடையச் செய்யாது. அத்தோடு சிறிலங்கா இராணுவம் இராணுவ நடவடிக்கையின் மூலம் குடாநாட்டிலோ அன்றி தமிழ் பிரதேசத்தின் வேறு ஒரு பகுதியிலோ ஒரு பகுதியைப் பிடிப்பதன் மூலமோ அன்றி தமிழ் மக்களைப் படுகொலை செய்வதன் மூலமோ இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டு விடப்போவதில்லை. இதற்கு கிழக்கில் இடம்பெற்று வரும் சம்பவங்களே போதியதாகும். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் கிழக்கு தனது பூரண கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக அறிவித்த சிங்கள இராணுவம், இன்று கிழக்கை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து திணறிக்கொண்டிருக்கின்றது

இந்நிலையில் சிங்கள அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வை நாடி நிற்கின்றமை ஒரு நீண்ட போருக்கு வழிவகுக்குமே ஒழிய ஒருபோதும் அரசுக்கு வெற்றியைத் தேடித்தராது. மாறாக பொருளாதார நெருக்கடியையும் உயிரிழப்பையுமே அதிகரிக்கும். அத்தோடு தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி இனப்பிரச்சினைக்கு தனிநாடு என்பதைத்தவிர வேறு எந்தத்தீர்வும் இல்லை என்ற நிலைமையும் உருவாகும்.

இந்த நிலையில் கடந்த காலங்களில் இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் எப்படிச் சிங்களப் பேரினவாதிகளால் முறியடிக்கப்பட்டன என்பதைசுருக்கமாகவும், பிரேமதாசாவின் அடுத்த திட்டம் என்னவாக இருக்கும் என்பது பற்றியும், பரிசீலனை செய்வது பொருத்தமானதாக இருக்கும் எனலாம்.

பண்டா - செல்வா ஒப்பந்தம், ஏற்பட்ட போதும், டட்லி - செல்வா உடன் படிக்கை உருவான போதும் தமிழரசுக் கட்சி பெரும்பாலும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் நிறுத்தப்படுவதற்கு அரசியல் சாசன ரீதியான வழியைத் தேடுவதிலேயே அக்கறை காட்டியிருந்தது எனலாம். ஆனால் இந்த ஒப்பந்தமும், உடன் படிக்கையும் உருக்குலைந்த போது கந்த எனினும் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுக் கொண்டவர்கள் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு முன்னால் மண்டியிட்ட போதும் கூட உரிய அதிகாரங்களை வழங்கி மாவட்ட அபிவிருத்தி சபைகளைப் பலப்படுத்துவதை விடவும், பயங்கரவாத தடைச் சட்டத்தை அறிமுகமாக்கி தமிழ் இளைஞர்களை வேட்டையாடுவதிலேயே சிறிலங்கா அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியது. இதற்காக இராணுவத்தையும் ஏவிவிட்டது.

1984லும் சர்வகட்சிமாநாடு என்று கூட்டப்பட்டு 'இணைப்பு சி' என்றொரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்ட போதும் அதனைக் குழப்பும் வகையில்தான் அரசு செயற்பட்டது. அதாவது அரசியல் கட்சிகளின் மாநாடுங்களிலும் தமிழ் மக்கள் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பும் கூட அந்த ஒப்பந்தத்தின் கீழ் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பதிலாகத் தமிழ் மக்களைப் பலவீனப்படுத்துவதிலேயே சிறிலங்கா அரசு கவனம் செலுத்தியது. உதாரணமாகத் தடுப்புக் காவல் கைதிகளின் விடுதலை, அரசியலமைப்பைத் திருத்தும் நடவடிக்கைகள் போன்றவற்றை வேண்டுமென்றே திட்டமிட்டுத் தாமதப்படுத்தி வந்த சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதம் களையப்பட வேண்டும் என்பதிலேயே ஆர்வம் காட்டியது

மற்றவர்களின் அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள மறுத்தவர்கள் வழியெனப் பிரகடனம் செய்து கொண்டார் விடுதலைப்புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பெறுபேறாக இந்திய இராணுவம் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டதும், அதனைத் தனது வெற்றியாக பிரமாதப்படுத்திக் கொண்டார் பிரேமதாசா இதன் மூலம் ஜே.வி.பியை நசுக்குவதற்காக 60,000க்கும் அதிகமானோர் கொன்று குவிக்கப்பட்டதும் சாதாரண மக்களின் அரசியல் கண்ணுக்கு மறைக்கப்பட்டது. பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் எதுவாக இருந்தாலும் பேசித் தீர்ப்போம் என்று பிரேமதாசா பகிரங்கமாக அழைப்பு விட்டபடியே இருக்க படையினர் ஜே வி பி.யினரை கொன்றொழித்தனர் என்பதை இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்த

மூன்றிலொரு பங்கு பெரும்பான்மையும், மற்றொருபதவிக்காலமும் கிடைத்தால் தான் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்று கூறிக் கொண்டு தேர்தல் நடத்த பிரேமதாசா அரசு முன்வரலாம். அல்லது இராணுவ நடவடிக்கைகளை மேலும்முடுக்கி விட்டு தமிழ் மக்களைக் கொன்றொழிக்க பிரேமதாசா அரசு முற்படலாம் அல்லது இரண்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படலாம். இவற்றின் மூலமாக இரண்டாவது பதவிக் காலத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் பிரேமதாசா முனைந்து நிற்கலாம் ஆனால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கோ, தமிழ் மக்களின் எண்ண வேட்கையை பூர்த்தி செய்வதற்கோ அவர் முற்படப் போவதில்லை என்பது தெளிவு.

# தமிழ்நாட்டில் பஞ்சாலை தொழிலாளர் காலவரையறையற்றவேலை நிறுத்தம்

தமிழ்நாட்டில் பஞ்சாலைத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொழிலாளர்களின் நலன் கருதியே நடுவர் மன்றத்திடம்விடப்பட்டதாக மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ரகுபதி கூறியுள்ளார்.

நடுவர் மன்றத்தின் தீர்ப்பு வெளியிடப்படும்வரை தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்கப்படும் என்று கூறிய அவர் மேலும் கூறுகையில் இதற்குப் பின்பும் தொழிலாளர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பது குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டார்.

தமிழ் நாட்டில் சுமார் இரண்டு லட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் காலை முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதுதெரிந்ததே இதனால் மாநிலமெங்கும் இருக்கும் சுமார் 700பஞ்சாலைகள் ஏறத்தாழ முழுமையாக வெறிச்சோடிப் போயிருப்பதாகக் கூறப்படுகிறது

இதேவேளை தொழிலாளர் பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு மாநில அரசு விட்டிருப்பது காலம் கடத்தும் செயல் என்று பல்வேறு தொழிற்சங்கங்களும் கண்டனம் தெரிவித்துள்ளன.

## பாபர் மசூதி தகர்ப்பை இந்துக்கள் ஏற்கவில்லை

### கணிப்பீடு தெரிவிப்பு

''இந்தியாவின் அயோத்தியில் காணப்பட்ட பாபர்மசூதி தகர்க்கப்பட்டமைக்கு இந்தியாவில் உள்ள 71சதவீதமான இந்துக்கள் ஆதரவளிக்கவில்லை. இவ் 71 சதவீதமான இந்துக்களும் இம்மசூதி தகர்க்கப்பட்டமையை மிகக்கடுமையாக ஆட்சேபிக்கிறார்கள்'' இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியாகிய அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றின் முடிவு கூறுகிறது.

இந்தியாவின் 5 பெரிய நகரங்களில் சுமார் 1000பேரை சம்மந்தப்படுத்தி மேற்படி ஆய்வை ''மார்க்'' என்ற ஆய்வு நிறுவனம் நடாத்தியது.

சுமார் 71 வீதமானோர் இந்த மசூதி தகர்க்கப்பட்டதன் விளைவாக இந்தியாவின் கீர்த்திக்கு களங்கம் ஏற்பட்டு விட்டதாக கருதுகின்றனர்.

சுமார் 29 வீத மானவர்கள் மட்டுமே இம்மசூதி தகர்க்கப்பட்டதை வரவேற்றுள்ளனர்.

## ஆடல் பாடலுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

இனவாதத்திற்கெதிராக ஜேர்மனியின் இரு நகரங்களில் நடந்த ஆர்ப்பாட்டங்களில் 4,50,000 ஜேர்மனியர்கள் கலந்து கொண்டனர். இவ் ஆர்ப்பாட்டத்தின்போது வழமைபோல் அல்லாது ஆடிப்பாடி மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

ஹம்பேர்க்கில் மட்டும் 3 லட்சம்பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டனர். மெழுகுதிரிகள் ஏந்தியவாறு பெரியவர்களும் சிறியவர்களும் அமைதியாக ஊர்வலம் சென்றனர்.

## வன்முறையை கண்டித்து ஒரு நாள் உண்ணாவிரதம்

### -இந்திய கத்தோலிக்கர் மேற்கொள்வர்

(டில்லி)

இந்தியாவில் நடைபெற்ற மத வன்முறைகளை கண்டித்து ஒரு நாள் உண்ணாவிரதத்தையும், சமய அனுஷ்டானங்களையும் மேற்கொள்ளுமாறு இந்திய கத்தோலிக்க மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஏற்பட்ட மத வன்முறையை கண்டித்து வரும் வெள்ளிக்கிழமை இவ்வாறு உண்ணாவிரதம் மேற்கொள்ளுமாறு புதுடில்லி அதிமேற்றாணியார் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; மதத்தை வைத்து வன்முறையில் ஈடுபடுதல் மிகவும் வருந்த தக்கது என்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார். பல்வேறு நாடுகளில் நடந்த வன்முறைகளையும் வன்மையாக அவர் கண்டித்தார்.

## சர்வமதவழிபாடு

(சென்னை)

இந்தியாவில் இம்மாதம் 30-ம் திகதி வகுப்பு ஒற்றுமையையும் அமைதியையும் வேண்டி நாடுமுழுவதும் சர்வ மத வழிபாடு நடாத்தப்படவிருக்கிறது.

## அசிட் வீசியசந்தேகநபர்கள் நீதிமன்றம் வரவில்லை

(சென்னை)

முன்னாள் இந்திய நிர்வாக சேவை அதிகாரி திருமதி சந்திரலேகா மீது அசிட் வீசிய குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவர் இந்த வழக்குச் சம்பந்தமாக நேற்று நீதிமன்றத்தில் சமுகம் அளிக்கவில்லை.

குற்றம் சுமத்தப்பட்டவர்களைக் கைது செய்து ஆஜராக்கும்படி நீதிபதி பிணையில்லாத பிடி ஆணை பிறப்பித்துள்ளார்.

## புதிய ஆணை பிறப்பிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் விசேட நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படும் குற்றவாளிகளுக்கு எந்த நீதிமன்றமும் பிணையில் செல்ல அனுமதிக்கக் கூடாது என்று புதிய ஆணையைப் பாகிஸ்தான் அரசு பிறப்பித்துள்ளது. இதனை எதிர்க்கட்சித் தலைவி பெனாசீர் பூட்டோ கண்டனம் செய்துள்ளார்.

கடந்த இரண்டுஆண்டுகளாகச் சிறையில் இருந்து வரும் பெனாசிரின் கணவர் அஜீவ் அலி சர்தாரி அண்மையில் பிணையில் விடுதலை செய்யப்படுவதற்கு முன்பாக இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிறு குடும்ப நெறியை அமுலாக்க இப்படியும் ஒரு சட்டம்

சிறு குடும்ப நெறியைக் கடைப்பிடிக்காமல் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்வோர் நாடாளுமன்றத்தில், அல்லது சட்டமன்றங்களில் உறுப்பினராவதைத் தடுக்கும்பொருட்டு சட்டமொன்றை நிறைவேற்ற இந்திய மத்தியஅமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதனை அமுல் படுத்துவதற்காக அரசியலமைப்பின் 102, 191 ஆகிய பிரிவுகளை திருத்தவும், இந்தத் திருத்தம் ஏற்கப்பட்டு ஒரு வருடத்தின் பின்பு, சட்டம் அமுலுக்கு வரும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஈழநாதம்

# லோக்சபாவை கலைத்துவிட்டு பொதுத்தேர்தலை நடத்துக

### - பாரதீய ஜனதாக்கட்சி கோரிக்கை

(டில்லி)

லோக் சபாவைக் கலைத்து விட்டுப் புதிதாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சி கோரியுள்ளது.

புதுடில்லியில் நேற்றுக் கட்சித் தலைவர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமும், ஒழுங்கும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களிலும் சட்டப் பேரவைகளைக் கலைத்து விட்டு அந்த மாநிலங்களில் புதிதாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென அத்தீர்மானம் கூறுகிறது.

கட்சியின் துணைத்தலைவர் சுந்தர்சிங் பண்டாரி நேற்றுப் புதுடில்லியில் இதனைத் தெரிவித்தார்.

அதேவேளை பாரதீய ஜனதாக் கட்சி உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரின் மாளிகைக்கு ஊர்வலமாகச் சென்று மத்திய அரசைக்கலைக்குமாறு கோரினர். மத்திய அரசைக் கலைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பாரதீய ஜனதாக்கட்சி இந்தியா முழுவதும் ஆர்ப்பாட்டம் நடாத்தத் திட்டமிட்டு வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இதே சமயம் பாரதீய ஜனதாவின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த மூன்று மாநிலஅரசுகளை மத்திய அரசு கலைத்ததமை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஏ. பி. வாஜ்பாய் தாம் செய்தது சரியான செயல் தான் என்று பிரதமர் உண்மையாகவே கருதுவதாக இருந்தால் லோக்சபாவைக் கலைத்து விட்டு தேர்தல் நடத்த உத்தரவிட வேண்டும் என்றும் சவால் விட்டார்.

## தடுப்பு முகாம் கூரையில் ஏறி கைதிகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பெலவத்தை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் முகாமின் கூரை மீது நின்று கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை 9. 30 மணியளவில் ஆரம்பமாகிய இப்போராட்டத்தில் சுமார் 50 கைதிகள் பங்குபற்றினர்.

கூரை மீது நின்று கூச்சலிடும் மேற்படி போராட்டம் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. விசாரணை செய் அல்லது விடுதலை செய் என்ற கோரிக்கையை முன்வைத்தே இப் போராட்டம் நடாத்தப்பட்டது.

## அன்பளிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை புற்றளை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த வறிய மாணவர்கள் 20 பேருக்கு பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா துணிவகைகளை வழங்கியுள்ளார்.

## மத்திய கிழக்கிலிருந்து திரும்பிய இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

மத்திய கிழக்கு நாடான சவுதி அரேபியாவிலிருந்து வந்து விடுதிகளில் தங்கியிருந்த பதின்மூன்று பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்த பதின்மூன்று தமிழ் இளைஞர்களும் ராகமவில் உள்ள விடுதிகளில் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் இவர்கள் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வந்த பெறுமதிமிக்க பொருள்கள் அங்குள்ள சிங்களவர்களினால் சூறையாடப்பட்டதாக அங்கிருந்துவந்த தமிழ்ப்பயணி தெரிவித்தார். (05)

## கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

யாழ் மாநகர சபை எல்லைக்குள் இயங்குகின்ற அனைத்துப் பாலர்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்குமான கருத்தரங்கு யாழ் இந்துக் கல்லூரியில் 1992-12-21-ம் திகதிகாலை 10-00 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் அனைத்துப் பாலர்பாடசாலைகளின் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கப்படுகின்றனர். (24)

## அறிவியலரங்கு

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் ''மனிசனின் குருதியும் குருதி மாற்றீடும்'' என்ற தலைப்பிலான அறிவியல் கருத்தரங்கொன்று நாளை வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு இடம் பெறவுள்ளது. விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் தீலக கல்விக்கோட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் இவ் அறிவியலரங்கு இடம் பெறுகிறது

## 'எயிட்ஸ்' பற்றிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'எயிட்ஸ்'நோய் பற்றிய கருத்தரங்கு ஒன்று வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரியில் நாளை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சகல மாணவர்களையும் கலந்து

## பரீட்சை இன்றுடன் முடிவு

(யாழ்ப்பாணம்)

நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற க. பொ. த. (சா. தர) பரீட்சைகள் யாவும் இன்றுடன் முடிவடைகின்றன என யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## முத்திரை தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் முத்திரைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வருகிறது.

பொது மக்கள் அஞ்சல் அலுவலகங்களுக்கு முததிரை பெறச் சென்றால் முத்திரை இல்லை என்ற பதில் கூறப்படுகிறது.

இதனால் பொது மக்கள் கூடுதல் விலை கொடுத்துத் தனியார் கடைகளில் முத்திரையைப் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம்

## இசை நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகக் கலை வட்டத்தின் ஆதரவில் கர்நாடக இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சிகள்ல் வெள்ளிக்கிழமை பி. ப. 3 முதல் 5 மணி வரை வ. ராமேஸ்வரனும், ஞாயிற்றுக் கிழமை பி ப. 3 முதல் 6 மணி வரை ஏ கே. கருணாகரனும் பாடுகிறார்கள்.

## இரு 'பாஜ்'கள் பருத்தித்துறை வரும்

[வடமராட்சி]

பருத்தித்துறை இறங்குதுறைக்கென இரண்டு புதிய இழுவைப் படகுகள் (பாஜ்) கொழும்பு துறைமுகத்திலிருந்து அனுப்பிவைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் மூலம் நேற்று தெரிய வந்தது.

இரண்டு இழுவைப் படகுகளும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. (யோ

## கல்வி அமைச்சில் விபரம் அறியலாம்

பட்டதாரி ஆசிரியர்களுக்கான சேவை முன்பயிற்சிக்குத் தெரிவாகியுள்ள போதிலும் இதுவரை அதற்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுக்

## ஆளுநர்கள் சிபார்சிலேயே மாநில அரசுகள் கலைப்பு

(டில்லி)

மத்திய அரசினால் ஐந்து மதவாத அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்ட தடை உத்தரவை. பாரதீய ஜனதாவின் தலைமையிலான மாநில அரசுகள் அமுல் செய்வது சந்தேகமே என்று ஆளுநர்கள் தெரிவித்த அறிக்கையின் அடிப்படையில்தான் மத்திய பிரதேசம், ராஜஸ்தான். இமாசலப் பிரதேசம் ஆகிய மாநில அரசுகள் கலைக்கப் பட்டதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த மூன்று அரசுகளும்,

### மத்தியஅரசுஅறிவிப்பு

அயோத்தியில் கரசேவையிலீடுபடுவதற்காக பகிரங்கமாகவே தொண்டர்களை திரட்டின என்றும். எனவே நிர்வாகம் செய்வதற்கு அவை அனுமதிக்கப்படக்கூடாது என்றும் பல்வேறு எதிர்க் கட்சிகளும் கூறியுள்ளன.

உடுகம்பொல

பட்டது.

அரசிற்கெதிராக மக்களை தூண்டும் விதத்தில் கடந்த ஏப்ரல் மாதத்தில் சத்தியக் கடதாசி வெளியிட்ட குற்றச் சாட்டு உடுகம்பொல மீது சுமத்தப்பட்டுள்ளது.

தமிழ்

பாராளுமன்ற தெரிவுக்குழு இத்தமாத இறுதிக்குள் முன் வைக்கா விட்டால் தாம் தெரிவுக் குழுவிலும், பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகுவதோடு ஏனைய தமிழ் உறுப்பினர்களையும் ராஜினாமாச் செய்யும்படி வற்புறுத்தப் போவதாக அதே தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசி

வீரச்சாவு

திரகுமார்) இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். இவரது வித்துடல் இன்று காலை முதல் இவரது வதிவிடமான செம்மணி வீதியில் முத்திரைச் சந்தி அருகிலுள்ள இல்லத்திலும் பி. ப. ஒரு மணி முதல 2 00 மணி வரை அரசியல்துறை யாழ். மாவட்ட செயலகத்திலும் தொடர்ந்து 3 30 வரை புத்தூர் மாவீரர் மண்டபத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கு அஞ்சலிக்கூட்டமும் நடைபெறவுள்ளது,

இறுதியாக அங்கிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் புனித புதை குழியில் விதைக்கப்படவுள்ளது.

இராணுவ

முன்னுதாரணமாகக் கொண்டு இன்றைய பௌத்த குருமார்

## லோக்சபா கலைக்கும் பேச்சிற்கே இடமில்லை

### காங்கிரஸ் கட்சி தெரிவிப்பு

லோக் சபாவைக் கலைத்து விட்டுப் புதிதாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று நேற்று புதுடில்லியில் இந்திரா காங்கிரஸ் கட்சிப் பேச்சாளர் தெரிவித்தார்.

தமது அரசுக்குப் பெரும்பான்மை ஆதரவு இருப்பதால் புதிய தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் எதுவும் இல்லை எனவும் அவர் கூறினார்.

லோக் சபாவையும், சட்டமும் ஒழுங்கும் பாதிக்கப்பட்ட மாநிலங்களிலும் சட்டப் பேரவைகளைக் கலைக்க வேண்டும் என்று பாரதீய ஜனதா கோரிக்கைவிட்டிருந்ததைத்தொடர்ந்தே காங்கிரஸ் இவ்வாறு தெரிவித்துள்ளது.

## மசூதி இடிப்பிற்கு இந். பாராளு. கண்டனம்

அயோத்தியில் பாபர் மசூதி தகர்க்கப்பட்டதை இந்தியப் பாராளுமன்றம் வன்மையாகக் கண்டித்துள்ளது. விஷ்வ ஹிந்துப் பரிஷத், ராஷ்டிர சேவா சங், பஜ்ரங்தள் போன்ற கட்சிகளின் தூண்டுதலால் இந்த அநியாயம் நடந்துள்ளது என்று நேற்று லோக் சபையில் நிறைவேறிய தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

இந்தச் சக்திகளின் தூண்டுதலால் மசூதி உடைக்கப்பட்டது நமது மதச் சார்பின்மை முறைமைக்கும், ஜனநாயக நெறிகளுக்கும் விடப்பட்ட அறைகூவல் என்று கூறும் அந்தத் தீர்மானம், நாட்டின் ஜனநாயகமும் சமயச் சார்பின்மையும் கட்டிக் காக்கப்படும் என்று கூறுகிறது.

இதேபோன்று ஒரு தீர்மானம் ராஜ்யசபாவில் நிறைவேற்றப்பட்டது.

பாரதீய ஜனதாக் கட்சியின் மாநில அரசுகள் மூன்று கலைக்கப்பட்டதால் சபையில் கூச்சலும் குழப்பமும் நிலவியது.

## வீர வணக்கம்

16 - 12 - 92 அன்று எம் மண்ணை ஆக்கிரமிக்கும் நோக்குடன் அளவெட்டியை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

**லெப். சிற்றம்பலம்**

**(அப்துல்லா)**

(நடராசா-சந்திரகுமார், திருக்கோணமலை)

அவர்களுக்கு

**எமது வீரவணக்கம்**

...இறு தலைப்பிலான அறிவியல் கருத்தரங்கொன்று நாளை வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு இடம் பெறவுள்ளது. விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் தீவக கல்விக்கோட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் இவ் அறிவியலரங்கு இடம் பெறுகிறது

## 'எயிட்ஸ்' பற்றிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'எயிட்ஸ்'நோய் பற்றிய கருத்தரங்கு ஒன்று வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரியில் நாளை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் யாழ். கோட்டத்தினர் அறிவித்துள்ளனர்.

## முத்திரை தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் முத்திரைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வருகிறது.

பொது மக்கள் அஞ்சல் அலுவலகங்களுக்கு முத்திரை பெறச் சென்றால் முத்திரை இல்லை என்ற பதில் கூறப்படுகிறது.

இதனால் பொது மக்கள் கூடுதல் விலை கொடுத்துத் தனியார் கடைகளில் முத்திரையைப் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி முத்திரையைப் பெற ஆவன செய்யும்படி பொதுமக்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். (24)

பருத்தித்துறை இறங்கு துறைக்கென இரண்டு புதிய இழுவைப் படகுகள் (பாஜ்) கொழும்பு துறைமுகத்திலிருந்து அனுப்பிவைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் மூலம் நேற்று தெரிய வந்தது.

இரண்டு இழுவைப் படகுகளும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. (யோ

## கல்வி அமைச்சில் விபரம் அறியலாம்

பட்டதாரி ஆசிரியர்களுக்கான சேவை முன்பயிற்சிக்குத் தெரிவாகியுள்ள போதிலும் இதுவரை அதற்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் நேரடியாக கல்வி அமைச்சுக்கு வந்து விபரமறியுமாறு கோரப்பட்டதாகச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இவர்கள் தமது சுட்டெண்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சு அலுவலகத்தில் மேற்படி விடயம் சம்பந்தமான விபரங்களை அறிந்து கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

## புத்தளத்தில் 'எயிட்ஸ்' நோயாளி

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியவர்களுடன் தொடர்பு வைத்திருந்த ஒருவருக்கு ''எயிட்ஸ்'' நோய் ஏற்பட்டுள்ளது.

புத்தளத்தைச் சேர்ந்த மேற்படிநபர் தற்பொழுது புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

32 வயதைக்கொண்ட இவர் சுமார் 70 வயதுக் கிழவன் போல் தோற்றமளிக்கிறார். இவர்வெளிநாடுசென்றதில்லை என்றும், ஆனால் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பியவர்களுடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

## விரிவுரையாளர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ஏ.கே. குணசிங்கராசா நேற்றுக்காலை 6 மணி அளவில் அவரது இல்லத்தில் காலமானார்.

யாழ் பல்கலைக்கழக கல்வியியற்துறை மொழியியல்விரிவுரையாளராகிய திரு. குணசிங்கராசா கடந்த ஒரு மாத காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார். (05)

அரசிற்கெதிராக மக்களை தூண்டும் விதத்தில் கடந்த ஏப்ரல் மாதத்தில் சத்தியக் கடதாசி வெளியிட்ட குற்றச்சாட்டு உடுகம்பொல மீது சுமத்தப்பட்டுள்ளது.

### தமிழ்

பாராளுமன்ற தெரிவுக்குழு இந்தமாத இறுதிக்குள் முன் வைக்கா விட்டால் தாம் தெரிவுக் குழுவிலும், பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகுவதோடு ஏனைய தமிழ் உறுப்பினர்களையும் ராஜினாமாச் செய்யும்படி வற்புறுத்தப் போவதாக அதே தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### அர.சி

நல்லூர். சாவகச்சேரி ஆகிய பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கே இவ்வாறு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது (பா

### காவல்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்முக்கிய உறுப்பினர்கள், பொது மக்கள் ஆகியோர் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இக் காவல் பணிமனையில் கிளிநொச்சி, பரந்தன், முரசுமோட்டை, விசுவமடு, வட்டக்கச்சி, ஸ்கந்தபுரம், 55-ம் கட்டை, திருநகர், ஜெயந்தி நகர், உருத்திரபுரம் ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்கள் தமது முறைப்பாடுகளை பதிவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### கிளாலி

வசதிகளும் அங்கு காணப்படாமையால் பெரிதும் அவதியுறுகின்றனர்.

இப்பகுதியில் குடிநீர், மலசலகூடம், வைத்திய வசதி, உணவு வசதிகள் எதுவுமே அற்ற நிலையில் இம் மக்கள் அவதியுறுகின்றனர். அங்கு தொற்றுநோய்கள்பரவக்கூடிய அபாய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அவதியுறும் தமக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க தொண்டர் ஸ்தாபனங்கள் முன்வருமா என இப்பயணிகள் அங்கலாய்க்கின்றனர். [71]

### பயணிகள்

புறப்பட்ட சுமார் மூன்று படகுகளை நோக்கி நேற்று அதிகாலை 2 00 மணியளவில் கடற்படையினர் தொடர்ச்சியாக பீரங்கி மற்றும் கலிபர் தாக்குதல்களை நிகழ்த்தினர். இதனைத்தொடர்ந்து அம் மூன்று படகுகளும் கிளாலிக்குத்திரும்பி கரை வந்து சேர்ந்தன. (பா)

வதிவிடமான செம்மணி வீதியில் முத்திரைச் சந்தி அருகிலுள்ள இல்லத்திலும் பி. ப. ஒரு மணி முதல 2 00 மணி வரை அரசியல்துறை யாழ். மாவட்ட செயலகத்திலும் தொடர்ந்து 3 30 வரை புத்தூர் மாவீரர் மண்டபத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கு அஞ்சலிக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

இறுதியாக அங்கிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் புனித புதை குழியில் விதைக்கப்படவுள்ளது.

### இராணுவ

முன்னுதாரணமாகக்கொண்டு இன்றைய பௌத்த குருமார்களும் செயற்படுவார்களாயின் தற்போதைய யுத்தத்ினை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்று அவர் தெரிவித்தார்.

நாம் அனைவரும் இன்று வெடிகுண்டுகளுக்கு மத்தியில் வாழ வேண்டியுள்ளது. இந்த துரதிர்ஷ்டத்தால் நமது பிறந்த பூமி நாசமடைகிறது முற்காலத்தில் நமது தாய் நாட்டைக் காக்க நமது மூதாதையர் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டுள்ளனர். துட்டகைமுனுவின் காலத்தில் இந்த நாட்டை விழுங்கிவிட தமிழர்கள் முற்பட்டபோது இராணுவத்தினருடன் சேர்ந்து பௌத்த குருமார்களும் களத்தில் இறங்கியது போன்று இன்றும் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு பௌத்த விகாரையையும் தேசிய மத்திய நிலையமாக மாற்றி ஒரு நேரம் பட்டினியாக இருந்து அதன் மூலம் நிதியை மீதப்படுத்தி அந்த நிதியை யுத்தத்தில் ஈடுபட்டு வரும் இராணுவத்தினருக்கு வழங்க வேண்டும்.

தற்போது தினந்தோறும் எமது போர் வீரர்கள் பலர் மரணமடைகின்றனர். அனேகமானவர்கள் காயமடைகின்றனர். ஆனால் எமது மதத் தலைவர்கள் இங்கு யுத்தம் நடைபெறவில்லையென்று அறிக்கை விடுகிறார்கள் என்றும அவர் மேலும் தெரிவித்தார்.

### யூ. என். பி.

மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. கட்சியின் செயற்குழுக்கூட்டம்சனியன்று கட்சித் தலைமைப் பணிமனையில் நடைபெறவுள்ளது. இதில் 5 000 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

---

# மரண அறிவித்தல்கள்

## ஆ. கி. குணசிங்கராசா M.A.

(விரிவுரையாளர் கல்வியியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)

பாரதி வீதி கம்பர்மலையைச் சேர்ந்தவரும், யாழ். பல்கலைக் கழகக் கல்வியியற்துறை விரிவுரையாளருமான ஆ கி குணசிங்கராசா அவர்கள் 16 - 12 - 92இல் காலமானார். அன்னார் கிருஷ்ணபிள்ளை சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகனும், மனோரஞ்சிதம் (ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும். கங்கா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புத் தந்தையும், அருணகிரிராசா, நடராசா (ஆசிரியர்), காலஞ்சென்ற சிவராசா (மனோஜி, தவராசா, செல்வராசா (பொறியியலாளர்), சண்முகராசா (ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கண்ணகை ஆகியோரின் அன்பு பருமகனுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 17 - 12 - 92 வியாழக்கிழமை (இன்று) முற்பகல் 10 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மகள்.

[3795]

## செல்வன் சீ. யோகநாதன்

(4 ஆம் வருட மாணவன், சித்த மருத்துவத் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

செல்வன் சீனித்தம்பி யோகநாதன் (நாவற்குடா. மட்டுநகர்) அவர்கள் 13 - 12 - 92 இல் அகாலமரணமடைந்தார். அன்னாரின் பூதவுடல் கைதடி பொருண்மிய மேம்பாட்டுக்கழக இல்லத்திலிருந்து அஞ்சலிக்காக இன்று மதியம் 12. 00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவத்துறை மண்டபத்தில் வைக்கப்பட்டு பின்னர் 3. 00 மணியளவில் கைதடி பெரியகாடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்- சித்தமருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

(3799)

---

# வீர வணக்கம்

16 - 12 - 92 அன்று எம் மண்ணை ஆக்கிரமிக்கும் நோக்குடன் அளவெட்டியை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

## லெப். சிற்றம்பலம்
## (அப்துல்லா)

(நடராசா-சந்திரகுமார், திருக்கோணமலை)

அவர்களுக்கு

## எமது வீரவணக்கம்

எந்தநேரமும் சிரிப்பும், பகிடியும்
ஏறுபோலவுன் துடிப்பும், உழைப்பொடு
விந்தையாயிரம் செய்த புலிமகன்
விழுந்துபோன செய்திகேட்டு நாம்
அந்தகார இருளில் மூழ்கினோம்
''அப்துல்லா'' உன் நினைவுச் சுழலது
வந்து வந்துமே நெஞ்சை வருத்திடும்
வணக்கத்தோடு அஞ்சலி செய்கிறோம்.

''நெஞ்சமுன் நினைவை இழக்காது
இந்த மண் உன்னை மறக்காது''

உன் நினைவைச் சுமக்கும்,
நண்பர்கள்

(சி-5601)

---

## தொண்டர் பயிலுனருக்கான அறிவித்தல்

தொண்டர் ஆசிரியராக கடமையாற்றி தற்போது பயிலுனர்களாக நியமனம் பெற்ற ஆசிரியர்களின் நியமனத் திகதியை முன் தேதியிடக்கோரி பாக்கிச் சம்பளத்தை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை இன்றும் நாளையும் யாழ் பட்டப்படிப்புக் கல்லூரியில் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

தொண்டர் பயிலுனர் சங்கம்

(3798)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 16.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7134

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

28-8051, 40-1516, 24-4476, 26-0535, 42-7312, 24-9744

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-4874, 26-4323, 26-1690, 22-4632, 40-7207, 28-2956, 24-0521, 26-3893, 28-6020, 27-8879, 28-1308, 24-0207, 26-3628, 41-6784, 24-3897, 40-9188, 28-6853, 24-7225, 26-1098, 24-5454, 22-7406, 24-5041, 24-2496, 26-2108.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.